தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 96 /பேரூ/2021

நாள்14.02.2022

திரு. சு. ராமராஜ்,
சக்கம்பட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவரின் 31.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2021ல் பெறப்பட்டு, 96/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவர் தமது 31.08.2021 நாளிட்ட புகார் மனுவில் ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.499/2B2B–ல் உள்ள கட்டிடத்தின் வீட்டுவரி எண்கள் 5669 முதல் 5696 வரை “ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்” பங்குதாரர் M.A. சுப்ரமணியம் என்ற பெயரில் 34/1985ல் வரைபட நகல் பெறப்பட்டுள்ளது என்றும், ஆனால் வீட்டு வரி S. சேட் என்ற பங்குதாரர் பெயரில் போடப்பட்டு வருகிறதென்றும், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பங்குதாரர் சேட் மற்றும் உமா R. பாக்கியம் ஆவண எண்.24/2003ல் தங்களுக்குரிய பங்குத் தொகையை M.A. சுப்ரமணியத்திடம் பெற்று விலகிவிட்டனர் என்றும், இதனிடைய S. சேட் கடந்த 04.11.2012ல் காலமாகிவிட்டார் என்றும், எனவே மேற்கண்ட வீட்டு வரியை ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தின் பெயருக்கு மாற்ற 11.2.2021ல் ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில்

விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கு எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, தமது புகார் மனு மீது விசாரணை செய்து மேற்கண்ட வீட்டுவரிகளை “ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்” என்ற நிறுவனத்தின் பெயருக்கு மாற்றிட ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தமது புகார் மனுவிற்கான ஆதாரங்களாக ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் உள்ள ஆவண எண்.1807/1985, ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் கூட்டாமை பங்குதாரர்களாக பதியப்பட்ட சான்று நகல், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பங்குதாரர்கள் விடுதலைப் பத்திர நகல், வரைபட அனுமதி நகல் எண்.34/1985, ஆண்டிபட்டி பிட்–1 சர்வே எண்.499/2B2Bல் உள்ள கட்டிடத்திற்கு 66 வருட வில்லங்கச் சான்று நகல், S. சேட் என்பவர் பெயரில் போடப்பட்டுவரும் வரிவிதிப்பு நகல்கள் மற்றும் திரு. சுப்பிரமணியத்தின் வாரிசு சான்று நகல் ஆகியவற்றை தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

3. மனுதாரரின் புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டு, 96/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது புகார் மனு மீது ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை கோரப்பட்டது. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 15.11.2021 நாளிட்ட தமது அறிக்கையில், தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி வார்டு எண்.11 மதுரை தேனி மெயின்ரோடு பகுதியில் சர்வே எண்.499/2B2B–ல் உள்ள கட்டிடத்தின் சொத்துவரி எண்கள்.5669 முதல் 5696 (புதிய வரிவிதிப்பு எண்கள் 7075 முதல் 7102 முடிய) மொத்தம் 28 கட்டிடங்களுக்கு சொத்துவரி கேட்பு பதிவேட்டின்படி சுமார் 20 வருடங்களுக்கு மேலாக எஸ். சேட் என்பவர் பெயரில் உள்ளதென்றும், ராஜலட்சுமி டெக்ஸ்டெல்ஸ் என்ற ஸ்தாபனத்திற்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் பங்குதாரர்களாக 1975ஆம் ஆண்டு முதல் இருந்து வந்துள்ளனர் என்றும், சொத்துவரி விதிப்பு கட்டிடங்கள் உயில் சாசனத்தின்படி பேரூராட்சி அலுவலகத்தில் எஸ். சேட் என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சொத்துவரி கேட்பு பதிவேட்டில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

4. ராஜலெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு (W.P.(MD) No.9720/2021) நிலுவையில் உள்ளதாகவும், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் ஒரே குடும்ப வாரிசுதாரர்களுக்குச் சொந்தமான மேற்படி சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களின் சர்வே எண்.488/1A, 488/1A, 489/2A, 289/2B, 489/3, 489/5 மற்றும் 499/2B2B ஆகிய இடங்களின் பட்டா மாறுதல் குறித்து பெரியகுளம் சார் ஆட்சியர் கடித எண்.ந.க.எண்.2141/2021/அ1–ன்படி (லேட்) M.A. சுப்பிரமணியம் என்பவரின் வாரிசுதாரர்கள் மற்றும் பங்குதாரர்களிடம் விசாரணை நடைபெற்றுவருவதாலும், மேற்கண்ட நீதிமன்ற வழக்கின் முடிவின் அடிப்படையிலும், பெரியகுளம் சார் ஆட்சியர் விசாரணை முடிவின் அடிப்படையிலும் மனுதாரரின் 11.2.2021 நாளிட்ட கோரிக்கை மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்க இயலும்

என்பதால், அன்னாரது மனு நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரிய விபரத்திற்கு பேரூராட்சி கடித ந.க.எண்.725/2021/அ2 நாள் 11.10.2021 அன்று பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

5. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரது கோரிக்கை குறித்த வழக்கு (W.P (MD) No.9720 of 2021) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ள மனுதாரரை 25.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 19.1.2022 நாளிட்ட அழைப்பாணை அவருக்கு அனுப்பப்பட்டது. மனுதாரர் திரு. சு. ராமராஜ் 25.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் எனது தந்தைக்குச் சொந்தமான ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்கின்ற சிறிய நூற்பாலை இயங்கி வருகிறது. அத்தொழிற்சாலையில் 9 தொழிலாளர்களைக் கொண்டு வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேற்கண்ட ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் எனது தந்தை திரு. எம்.ஏ. சுப்பிரமணியம் என்பவரின் பெயரில்தான் பிளான் உள்ளது. ஆனால் மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்துவரி எனது சகோதரர்களில் ஒருவரான திரு. சேட்டு என்பவரின் பெயரில் 20 வருடங்களுக்கு முன்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனது தந்தை திரு. சுப்பிரமணியம் 2009ல் காலமானதால், மேற்கண்ட சொத்துவரியில் பெயர்மாற்றம் செய்வது குறித்து பேரூராட்சியில் பலமுறை விண்ணப்பங்கள் அளித்தும், எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. இந்நேர்வு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் எவ்வித வழக்கும் தற்போது நிலுவையில் இல்லை. எனவே, மேற்கண்ட எனது சகோதரர் (லேட்) சேட்டு என்பவரின் பெயரில் உள்ள சொத்துவரியை ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் மாற்றித்தர ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரது புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக் கிளையில் திரு. S. ராமராஜ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ள W.P.(MD) No.9720/2021–ல் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரையின் நகல், தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பிட்–1 கிராமம், புல எண்.488/2A மற்றும் பல புல எண்கள் பெயர் மாற்றம் குறித்து திரு. ராமராஜ் என்பவரால் அளிக்கப்பட்ட 1.6.2021 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், சார் ஆட்சியர், பெரியகுளம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக மனுதாரர் திரு. ராமராஜ் மற்றும் ஏழு எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள 19.3.2021 நாளிட்ட விசாரணை அழைப்பாணையின் நகல் மற்றும் பொது தகவல் அலுவலர்/செயல் அலுவலர், ஆண்டிபட்டி பேரூராட்சி அவர்களால் திரு. சு. ராமராஜ் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் அனுப்பப்பட்டுள்ள 11.10.2021 நாளிட்ட கடிதம் ஆகிய அனைத்தும்

இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் வீட்டுவரி எண்கள்.5669 முதல் 5696 (28 வீட்டுவரி) பெயர்மாற்றம் செய்வது குறித்து ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள 11.2.2021 நாளிட்ட மனுவில் தனது தந்தை M.A. சுப்பிரமணியம் "ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்" என்ற நிறுவனத்தை 3191/ஆ1/85 நாள் 27.3.1985 மற்றும் 31.3.1994ல் கூட்டு நிறுவனமாக பெரியகுளம் மாவட்ட பதிவு அலுவலகத்தில் பங்குதாரர்களாக (1) M.A. சுப்பிரமணியம் (2) S. சேட் (3) K. உமா (4) R. பாக்கியம் (5) சு. கணேசன் (6) சு. ராமராஜ் ஆகிய 6 பேர்களும் பங்குதாரர்களாக சேர்த்து பதிவு செய்து புதிய நிறுவனத்தை தொடங்கினார்கள் என்றும், மேற்படி ராஜலட்சுமி டெக்ஸ்ஸ்டல்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவர் S. சேட் மூலம் ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு தனது அசோகன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் ஆண்டிபட்டி கிராம சர்வே எண்.499/2Bல் 8 செண்ட் காலி இடத்தை நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆவண எண்.1807/1985 முலம் பத்திரப் பதிவு செய்து கொடுத்து 19.7.1985ல் ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பங்குதாரர்களில் ஒருவரான M.A சுப்பிரமணியம் என்ற பெயரில் ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு வரைபட நகல் எண்.34/1985ல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

- மேற்கண்ட கட்டிடத்திற்கு இதுநாள் வரை ராஜலெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பங்குதாரர்களில் ஒருவரான S. சேட் என்ற பெயரில் வரிவிதிப்பு எண்.5669–5696 நம்பராக 28 ரசீதுகள் போடப்பட்டுவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

- நிறுவனத்தின் பங்குதாரர்களாக உள்ள S. சேட், K. உமா, R. பாக்கியம் ஆகிய மூன்று நபர்களும் மற்றொரு பங்குதாரர்களில் ஒருவரான M.A சுப்பிரமணியத்திற்கு ஆண்டிபட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.24/2003ன்படி தங்களுக்குரிய பங்குத்தொகையை பெற்றுக்கொண்டு மேற்கண்ட கூட்டாமை நிறுவனத்திலிருந்து விலகிவிட்டதாக பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார்கள்.
- பங்குதாரர்களில் ஒருவரான M.A. சுப்பிரமணியம் 9.1.2009ல் காலமாகிவிட்டார். மேலும் பங்குதாரர்களில் ஒருவரான திரு. S. சேட் என்பவரும் 04.11.2012 அன்று காலமாகிவிட்டார் என்றும்;
- எனவே குடும்ப கூட்டாமை நிறுவனமான ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஆண்டிபட்டி பிட் 1ல் 499/2Bல் உள்ள கட்டிடத்தின் வீட்டுவரிகளை கூட்டாமை நிறுவனமான "ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்" என்ற நிறுவனத்தின் பெயரில் பெயர்மாற்றம் செய்துதருமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது தெளிவாகிறது.
- ஆண்டிபட்டி பேரூராட்சியால் 18.1.2017ல் வழங்கப்பட்டுள்ள சான்றின்படி வரிவிதிப்பு எண்கள்.5669 முதல் 5696 வரை (28 எண்கள்) 2016–2017ஆம் ஆண்டிற்கு நிலுவையின்றி சொத்துவரி ரூ.19,360/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து முன்னூற்று

அறுபது மட்டும்) செலுத்தப்பட்டுள்ளதாக சான்றளிக்கப்பட்டு, அச்சான்று மனுதாரர் திரு. எஸ். ராமராஜ், 320 தேனி மெயின்ரோடு, சக்கம்பட்டி, ஆண்டிபட்டி என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

❖ The Partnership Deed was executed on 25.02.1985 between (1) M.A. Subramanian, son of Sri. M. Ayyanar Moopanar (2) S. Sait, son of M.A. Subramanian (3) K. Uma, wife of S. Kandasamy and (4) R. Packiam, wife of S. Rajasekaran to carry on business on partnership basis in yarn and cloth under the name "Rajalakshmi Textiles" at No.320-C, Main Road, Sakkampatti, Aundipatti, Periakulam Taluk.

❖ திருமதி. ஆர். பாக்கியம் மற்றும் S. சேட் ஆகிய இருவரும் ராஜலெட்சுமி நிறுவனத்திலிருந்து 31.3.1994ல் ஓய்வு பெற்றதையடுத்து, 01.04.1994ல் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டாமை நிறுவன உடன்படிக்கையின்படி (Partnership Deed) திரு. எம்.ஏ. சுப்பிரமணியம் (2) திருமதி. K. உமா (3) திரு. S. கணேசன், த/பெ M.A. சுப்பிரமணியம் மற்றும் (4) S. ராமராஜ் ஆகிய நால்வரும் ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி திரு. எம்.ஏ. சுப்பிரமணியம் என்பவருக்கு அவரது குமாரர் திரு. சு. சேட்.1, திம்மரசநாயக்கனூர் கிராமம், சக்கம்பட்டி, திருவள்ளுவர் காலனியில் வசித்துவரும் திரு. சு. கந்தசாமி அவர்களின் மனைவி இல்லறம் திருமதி. க. உமா.2, திரு. சு. ராஜசேகரன் அவர்கள் மனைவி திருமதி. ரா. பாக்கியம்–3 ஆகிய மூன்று பேர்களும் கூட்டாமை நிறுவனமான ராஜலெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திலிருந்து தங்களுக்குரிய தொகையைப் பெற்றுக்கொண்டு, கூட்டுத் தொழில் விலகல் (விடுதலை) பத்திரம் அளித்து/கையொப்பமிட்டு அளித்துள்ளது உறுதியாகிறது.

❖ மனுதாரர் தனது 31.8.2021 நாளிட்ட புகார் மனுவில், ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவன பங்குதாரரான திரு. S. சேட் 04.11.2012ல் காலமாகிவிட்டார் என குறிப்பிட்டுள்ளபோதிலும், அவரது இறப்புச் சான்றிதழை தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பவில்லை

7. இந்நேர்வில், ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி வார்டு எண்.11 மதுரை தேனி மெயின்ரோடு பகுதியில் சர்வே எண்.499/2B2Bல் உள்ள கட்டிடத்தின் சொத்துவரி எண்கள்.5669 முதல் 5696 முடிய (புதிய வரிவிதிப்பு எண்கள்.7075 முதல் 7102 முடிய) 28 கட்டிடங்களுக்கான சொத்துவரி, பேரூராட்சி சொத்துவரி கேட்பு பதிவேட்டின்படி சுமார் 20 வருடங்களுக்கு மேலாக எஸ். சேட் என்பவர் பெயரில் உள்ளது தெளிவாகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், பிரிவு 10 (3) (c)ன்படி "முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது" என்பதால், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது அறிக்கையினை ஏற்று, சுமார் 20 வருடங்களுக்கு மேலாக எஸ். சேட் என்பவர் பெயரில் உள்ள வீட்டுவரிகளை

கூட்டாமை நிறுவனமான ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்கின்ற நிறுவனத்தின் பெயருக்கு மாற்றித்தர உத்தரவிடுமாறு மனுதாரர் திரு. சு. ராமராஜ் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள **31.8.2021** நாளிட்ட புகார் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாதென்று முடிவுசெய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 14– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x

தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. சு. ராமராஜ், த/பெ சுப்ரமணியன்,
320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

15/2/22

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032